# சென்னை மியாட் மருத்துவமனையில் லண்டன் பெண்ணுக்கு குடல் ஆபரேஷன்

புதுச்சேரி, ஜூலை 6–

லண்டனை சேர்ந்த பெண்ணுக்கு, சென்னை மியாட் மருத்துவமனையில், சிக்கலான குடல் அறுவை சிகிச்சை, வெற்றிகரமாக செய்யப்பட்டது.

லண்டனை சேர்ந்த, 51 வயதான ஜாஸ்பிர்கௌர் சாஹல் என்ற பெண், கடந்த ஜூன் 18ம் தேதி, குடல் அடைப்பு மற்றும் அடிவயிற்று வலியால் மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

லண்டனில் பல மையங்களில், நோய் அறிதல் மற்றும் மதிப்பீடு செய்த பின், இம்மருத்துவமனையை தேர்வு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

முதுகுத்தண்டை பாதிக்கும் அன்கிளைசிங் பான்டிலிட்டிஸ் என்னும் பிரச்னைக்காக, என்சைடு மருந்தை, நீண்ட காலமாக இப்பெண் பயன்படுத்தியுள்ளார். இதனால், மிக அரிதான டைகிராப்கம் என்ற நோய் உண்டானது.

குடல் அடைப்புகளை தவிர்க்கும் வகையில் ஜாஸ்பிர்கௌர் சாஹல், பல மாதங்களாக, திரவம் மற்றும் குறைவான நார்சத்து உணவுகளை சாப்பிட்டு வந்தார்.

டாக்டர் அருள்பிரகாஷ், குடலில் பாதிக்கப்பட்ட பகுதிக்குள் காற்றுபைகளை செலுத்தி, சோதனை செய்யும் டபுள் பலூான் எண்ட்ரோஸ்கோபி என்ற சிக்கலான முறையில் நோய் கண்டறிதல் மேற்கொண்டார். இதில், குடலில் பல இடங்களில் குழல் சுருக்கங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

டாக்டர் பாஸ்கரன் தலைமையில், அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதில் குடல் சிதைவு ஏற்பட்ட 2 அடி குடல் வெட்டி அகற்றப்பட்டு, மீதமுள்ள 9 இடங்களில் ஏற்பட்ட சவ்வு போன்ற விக்கம் சரி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.



சென்னை மியாட் மருத்துவமனையில், சிக்கலான குடல் அறுவை சிகிச்சை செய்து கொண்ட லண்டனை சேர்ந்த ஜாஸ்பிர்கௌர் சாஹல் [கண்ணாடி அணிந்திருப்பவர்]. அருகில், மியாட் சேர்மன் மல்லிகா மோகன்தாஸ், டாக்டர் பாஸ்கர்.